**21.11.2025**

**SOP.No.142/2021**

**ம.சா. 1: சிவகாமி**

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1) நான் 3 வது வரை படித்து உள்ளேன். எனது உடன் பிறந்தவர்கள் 5 பேர். அதில் 2 ஆண்கள் மற்றும் 3 பெண்கள். வளர்மதி, பழனியப்பன், தர்மர், சிவகாமி, ராஜாமணி ஆகியோர்தான் என்னுடன் பிறந்தவர்கள். எனக்கு திருமணம் ஆகி சுமார் 40 வருடம் ஆகியது. எனக்கு திருமணம் ஆகி எனது கணவருடன் தான் உள்ளேன். பழனியப்பன் இறப்பதற்கு முன்பு அவர்களுடன் பேச்சு வார்த்தையில் இல்லை என்று சொன்னால் என்றால் சரியல்ல. பழனியப்பனுக்கும் சித்ராவுக்கும் 1993 ல் திருமணம் நடைபெற்றது. சித்ரா திருமணம் ஆகி சுமார் 7 வருடம் உயிருடன் இருந்தார். அவர் இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். (குறிப்பு இல்லை)

2) பழனியப்பன் அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக வேலை பார்த்தார். பழனியப்பன் உயிருடன் இருக்கும்போது பாகப்பிரிவினை எதுவும் நடக்கவில்லை என்றால் சரிதான். சித்ரா இறந்த பிறகு பழனியப்பன், பூங்கொடி என்பவருடன் தொடர்பில் இருந்தார் என்றால் சரியல்ல. பூங்கொடி காட்டிற்கு வேலைக்கு வந்து சென்றவர். பழனியப்பன் எதனால் இறந்தார் என்றால் அவர் புற்றுநோயால் இறந்தார். அவர் இறந்ததே வளர்மதி வீட்டில் தான். இறப்பதற்கு 15 நாட்கள் முன்பு தான் வளர்மதி வீட்டிற்கு வந்தார் என்றும் அதற்கு முன்பாக பூங்கொடி தான் அவருக்கு மருத்துவ சிகிச்சை எடுத்து பார்த்து கொண்டார் என்றால் அது தெரியாது. பின்னிட்டு சண்முகா மருத்துவமனையில் அவரை அனுமதித்து பூங்கொடி தான் மருத்துவ சிகிச்சை எடுத்து வந்தார் என்றால் சரியல்ல.

3) அதற்கு பின்னிட்டு ஜிப்மர் மருத்துவமனைக்கு வரை அழைத்து சென்று பூங்கொடி தான் மருத்துவ சிகிச்சை பார்த்த விவரம் தெரியும் என்றால் எனது அக்கா வீட்டுகாரர் தான் கூட்டி சென்றார்கள். பழனியப்பனை பார்த்து கொண்டதாக சொல்வதற்கு

மருத்துவ பில்கள் உள்ளதா என்றால் எனது அக்காவிடம் தான் உள்ளது. எனக்கு தெரியாது. பழனியப்பன் இறந்ததற்கு அரசு போக்குவரத்து கழகத்தில் இருந்து ஈமச்சடங்கிற்காக பூங்கொடியிடம் தான் ரூ.8000 பணம் கொடுத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பழனியப்பன் இறந்ததற்கு பின்னிட்டு அவருடைய இறுதி கால பணப்பயன்களை கொடுக்குமாறு அரசு போக்குவரத்து கழகத்தில் சென்று கேட்டோமா என்றால் கேட்டோம். அதற்கு அவர்கள் பணம் எங்களிடம் கொடுக்கவில்லை. அவர்கள் கொடுக்க மறுத்துவிட்டார்கள்.

4)நாங்கள் பணப்பயன்களை கோரியபோது பணிப்பதிவேட்டை பார்த்து நாங்கள் வாரிசுதாரர்கள் இல்லை என்று சொல்லி அதில் பூங்கொடி தான் வாரிசுதாரர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொல்லி விட்டார்கள் என்றால் தெரியவில்லை. பழனியப்பனுக்கு பிரிந்தது 1.95 ஏக்கர் நிலத்தை நாங்கள் விற்றுவிட்டோம் என்றால் சரிதான். அதை விற்று சுமார் 3 வருடம் இருக்கும். நாங்கள் விற்றதை மறைப்பதற்காக தான் தற்போது நீதிமன்றத்திற்கு வந்து நாங்கள் தான் பழனியப்பன் வாரிசுகள் என்று மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பூங்கொடி தான் வாரிசு என்று ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை முதலியவற்றை பொறுத்து அரசு போக்குவரத்து கழகத்தில் பணிப்பதிவேட்டில் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் சொன்னால் அது தவறு. அது போலியானது. பூங்கொடி தான் பழனியப்பனுக்கு மருத்துவ செலவு தான் செய்தார் என்று சொன்னால் நாங்கள் எதுவும் செய்யவில்லை. 10ம் மாதம் 2019 முதல் 4 மாதத்திற்கு மருத்துவ சிகிச்சைக்காக பழனியப்பனுக்கு பூங்கொடி தான் ரூ.4 லட்சம் வரை செலவு செய்தார் என்றால் சரியல்ல.

5) பழனியப்பன் நிலத்தை மறைத்து உரிய வாரிசு சான்று இல்லாமல் அவரது நிலத்தை விற்றுவிட்டதால் அதை மறைக்க மேற்படி பூங்கொடி அரசு போக்குவரத்து கழகத்தில் இறந்துபோன பழனியப்பனின் வாரிசு தான் என்று பதிவு மேற்கொள்ளப்பட்ட நிலையில் பழனியப்பனுக்கு நாங்கள் தான் வாரிசு என்று ஒரு பொய்யான இந்த வாரிசுரிமை

கோரும் மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. எனவே மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

2 மற்றும் 3 எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.21 18:00:26 +0530

**Subordinate Judge, Attur.**